உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 02.06.2026 • மலர் 04 • இதழ்: 153 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 02.06.2026 • Vol : 04 • Issue : 153 • Page : 4 • Rs. 5/-

# ராணுவ வீரர்களுக்காக நிதி திரட்டல்

## தமிழக பெண் கல்வியாளரை பிரதமர் மோடி பாராட்டினார்



புதுடெல்லி, ஜூன் 2

ராணுவ வீரர்களுக்காக பள்ளி மாணவர்களிடம் நிதி திரட்டி தேச பக்தியை வளர்த்ததாக தமிழ் நாட்டின் பெண் கல்வியாளர் கிரிஜாவை பிரதமர் மோடி பாராட்டி உள்ளார். பிரதமர் மோடி தனது மாதாந்திர வானொலிநிகழ்ச்சியான மன் கி பாத்தில் நேற்று பேசியதாவது: தமிழ் நாட்டின் நாகர்கோவிலில் நான் ஒரு ஆசிரியரை சமீபத்தில் சந்திக்க நேர்ந்தது. அவரது பெயர் கிரிஜா அம்மா. சென்னையில் உள்ள ஜெய் கோபால் கரோடியா இந்து வித்யாலயா உட்பட 15 பள்ளிகளை நடத்தி வருகிறார்.

அவரது தேசபக்தி ஒவ்வொரு இந்தியருக்கும் உத்வேகம் அளிக்கிறது. மன் கி பாத் நிகழ்ச்சியால் ஈர்க்கப்பட்ட அவர், ராணுவ வீரர்களுக்கு சேவை செய்ய உறுதி ஏற்றார். அதற்காக அவர் தனது அனைத்துப் பள்ளிகளின் மாணவர்களையும் ஊக்குவித்தார். துணிச்சலான வீரர்களுக்காக தினமும் ஒரு ரூபாய் பங்களிக்குமாறு குழந்தைகளிடம் கேட்டுக்கொண்டார். இதன் மூலம் ஒவ்வொரு மாணவரும் ஒரு வருடத்தில் 365 ரூபாய் சேகரித்துள்ளனர்.

இந்தச் சிறிய பங்களிப்புகளின் வாயிலாக, ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் திரட்டப்பட்டது. பின்னர், கிரிஜா அம்மாள் அந்த முழுத் தொகைக்கு மானகாசோலை ஒன்றை ஒப்படைத்தார். இது பாரதத் தாயின் மீது அவர் கொண்டுள்ள ஆழ்ந்த அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. கடந்த ஆண்டு தான் சென்னையின் முதல் இந்து பள்ளி தனது 50 ஆண்டு கால நிறைவு விழாவை கொண்டாடியது. நாட்டின் கல்வி மற்றும் கலாச்சாரப் பெருமையை முன்னெடுத்துச் செல்வதில், இந்தப் பள்ளி அமைப்பின் பங்கு மிகவும் பாராட்டுக்குரியது. இதில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்த்து தெரிவிக்கிறேன்.

குறிப்பாக, நமது வீரத் தளபதிகளுக்கு பங்களித்த மாணவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். சமீபத்தில் நெதர்லாந்து நாட்டிற்கு சென்ற போது, சோழர்கள் காலத் தொன்மையான தாமிரப் பட்டயங்கள் இந்தியாவிடம் திருப்பி ஒப்படைக்கப் பட்டது. இந்தத் தாமிரப் பட்டயங்கள் தொடர்பாக பல நாடுகளிலிருந்து எனக்குத் தொடர்ந்து செய்திகள் கிடைத்து வருகின்றன. இந்தத் தாமிரப் பட்டயங்கள் தொடர்பாக மக்கள் மனங்களில் நிறைய ஆவல் இருக்கிறது.

இவற்றிலே 21 பெரிய மற்றும் 3 சிறிய பட்டயங்கள் இருக்கின்றன. இவை முக்கியமாக பேரரசர் முதலாம் ராஜேந்திர சோழன் வாயிலாக அவருடைய தந்தையார் பேரரசர் ராஜராஜ சோழன் அளித்த ஒரு வாக்குறுதியை நிறைவேற்றி வைத்தல் தொடர்பானது. ஆனைமங்கலம் என்ற ஒரு கிராமத்தை ஒரு புத்த விஹாரம் அமைக்க தானமாக அளிப்பது பற்றி இதிலே குறிப்பு இருக்கிறது.

இந்தத் தாமிரப் பட்டயங்களிலே சோழ சாம்ராஜ்ஜியத்தின் சாதனைகள் பற்றியும் விவரிக்கப்பட்டிருக்கிறது. சோழ சாம்ராஜ்ஜியத்தின் கடல் வல்லமை எத்தனை மகத்தானதாக விளங்கியது என்பதை இதிலிருந்து நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு அவர்களுக்கு இருந்த தொடர்புகளைப் பற்றிய தகவல்களும் இவற்றிலே காணக் கிடைக்கின்றன.

சோழ சாம்ராஜ்ஜியத்தின் வளமான வரலாறும், கலாச்சாரமும் தொடர்பாக நம்மனைவருக்கும் பெருமிதம் ஏற்படுகிறது. இந்த அரசு இந்தியாவின் விலைமதிப்பில்லாத மரபுச் செல்வங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறு கூறினார்.

பிரதமர் மோடி பேசுகையில், ''இப்போது நாட்டின் பல பாகங்களில் தீவிரமான வெப்பம் காணப்படுகிறது. கடுமையான வெப்பம், சூடான காற்று, இது போன்ற பருவநிலைகளில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். தொடர்ந்து தண்ணீர் குடியுங்கள். வெயிலில் செல்ல வேண்டியிருந்தால், கவனித்துச் செல்லுங்கள். அரசின் பல்வேறு துறைகள் அளித்திருக்கும் வழிகாட்டி நெறிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்கத் தவறாதீர்கள்'' என்றார்.

## தேனி மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தேனி, ஜூன் 2

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (01.06.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 291 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர்இரா.வைத்திநாதன், பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித் தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 291 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களின்கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.2,03,600/ மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் 2 மாற்றுத்திறனாளிகளுக்கும், ரூ.94,500/ மதிப்பிலான சக்கர நாற்காலி 6 நபர்களுக்கும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்1 மூலம் தலா ரூ.15,000/ வீதம் 5 முஸ்லிம் ஏழை மகளிர்களுக்கும், கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம்1 மூலம் தலா ரூ.15,000/ வீதம் 5 கிறிஸ்துவ ஏழை மகளிர்களுக்கு சுயதொழில் தொடங்க காசோலைகளையும் என மொத்தம் ரூ.4,48,100/ மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை 18 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, உதவி ஆணையர் (கலால்) பஞ்சாபகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுரேஷ்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தஞ்சாவூர் மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்: மாவட்ட கலெக்டர் தலைமையில் நடந்தது



தஞ்சாவூர் ஜூன் 2

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில்மக்கள்குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் இரா ரேவதி தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் இலவச மனை பட்டா, முதியோர் உதவித் தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம் ,உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 694 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட கலெக்டர் அவர்களிடம் வழங்கினார்கள் இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் இரா ரேவதி உத்தரவிட்டார்

தொடர்ந்து பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் அவர்களிடம் ஒரத்தநாடு வட்டம் தென்னமநாடுபகுதியைச்சேர்ந்தமாற்றுத்திறனாளி முருகையன் மடக்கு சக்கரநாற்காலியும், திருவையாறு வட்டம் வளம்பகுடியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி அணண்ஸியாவு க்கு காதொலிக்கருவியும், கீழவாசல் பகுதியை சேர்ந்த லலிதா தையல் இயந்திரமும் கேட்டு விண்ணப்பித்திருந்த இன்றே வழங்கப்பட்டது

மேலும் மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினை மோனல் கவி க்கு மாவட்ட கலெக்டர் இரா ரேவதி வழங்கினார்



## தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியின் புதிய டீன் பொறுப்பேற்பு:அமைச்சர் வாழ்த்து

தூத்துக்குடி, ஜூன் 2

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் புதிய டீன் ஆக மயக்கவியல் துறை பேராசிரியர் டாக்டர் இ.எபினேசர் ஜோயல் குமார் பொறுப்பேற்றுள்ளார்.

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியின் டீனாக பணி புரிந்து வந்த சிவக்குமார் அண்மையில் தனது அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். இதையடுத்து சென்னை அரசு மருத்துவக் கல்லூரியில் மயக்கவியல் துறை பேராசிரியராகப் பணிபுரிந்து வந்த டாக்டர் இ.எபினேசர் ஜோயல் குமார் புதிய டீனாக நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, அவர் இன்று காலை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள தனது அலுவலகத்தில் முறைப்படி கோப்புகளில் கையெழுத்திட்டுப் புதிய டீன் ஆகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய டீன் ஆகப் பொறுப்பேற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, அவர் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினரும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சருமான ஸ்ரீநாத்தை நேரில் சந்தித்து மரியாதை நிமித்தமாகப் பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார். இந்த சந்திப்பின் போது தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ அலுவலர் சைலஸ் ஜெயமணி, டாக்டர் பத்மநாபன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## தஞ்சாவூர் மாவட்ட கலெக்டராக இரா .ரேவதி பொறுப்பேற்றுக் கொண்டார்



தஞ்சாவூர் ஜூன் 2

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவல கத்தில் மாவட்ட கலெக்டராக இரா .ரேவதி பொறுப்பேற்றுக் கொண்டார்

தஞ்சாவூர்மாவட்ட கலெக்டர் இரா. ரேவதி இ.ஆ.ப அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கை யில் பெருமைமிகு தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட கலெக்டராக பணி ஏற்பதில் மிகுந்த பெருமையுடன் மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்கு முன் பல கலெக்டர்கள் நிறைய நல்ல பணிகள் மேற்கொண்டனர். அப்பணி களை மேலும் தொடர்ந்து மேற்கொள் வேன் . இவை முக்கியமான கடமையும் பொறுப்பும் ஆகும். தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் பொதுமக்களை சென்றடையும், வேளாண்மை சார்ந்த மாவட்டம் என்பதால் விவசாயிகளு க்கு முன்பு சென்றடைந்த திட்டங்கள் தொடரும் .தஞ்சாவூர் மாவட்டத்தில் முன்னேற்றத்திற்கு அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் இரா ரேவதி தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மு பாலகணேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர் .

## திமுக கூட்டணியில் மதிமுக தொடருமா? எம்.பி. துரை வைகோ விளக்கம்

திருச்சி, ஜூன் 2

சட்டமன்றத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டதால் தவெகவிற்கு ஆதரவளிக்க முடியவில்லை என்றும், கூட்டணி குறித்து தனிப்பட்ட முறையில் முடிவெடுக்கமுடியாது என்றும் திருச்சி எம்.பி. துரை வைகோ தெரிவித்துள்ளார். மதிமுக ஒரு தனி இயக்கம் என்பதால் சுயேச்சையான முடிவுகள் அவசியம் என குறிப்பிட்டுள்ள அவர், திமுக கூட்டணியில் நீடிப்பது குறித்து மே 27ல் நடைபெறும் பொதுக்குழுவில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார். மேலும், அரசியல் நெறிமுறையின்



அடிப்படையிலேயே புதிய முதலமைச்சர் விஜயை தாம் வரவேற்றதாகவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

## திருச்சி: முதல்வர் விஜய் எழுச்சியுரை

திருச்சி, ஜூன் 2



திருச்சி கிழக்கு தொகுதியில் மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் விஜய், என்நெஞ்சில்குடியிருக்கும் என்று மக்களுக்கு வணக்கம் என்றும் . என்னோட இதயத்துக்குதிருச்சிகிழக்கு மக்கள் நெருக்கமானவர்கள் .இன்னும் கொஞ்சம் அதிகமா ஆதரித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று முதல்வர் விஜய் கூறினார். நீங்கள் அமைத்துக்கொடுத்த ஆட்சியில் எல்லா நன்மைகளையும் பார்ப்பீர்கள் என்றார். தயவு செஞ்சு கேலி, கிண்டல் பேச்சுக்களை நிப்பாட்ட வேண்டாம் என தன்னை விமர்சிப்பவர்களுக்கும். தான் கோட் சூட் போடுவது குறித்து பேசிய முதல்வர் விஜய், ஏன் நாமெல்லாம் கோட் சூட் போடக்கூடாதா என்று கேள்வி எழுப்பினார்.

கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.50,000 வரை பயிர் கடன் பெற்ற குறு விவசாயிகளின் கடன் தள்ளுபடி என அறிவித்திருந்தோம். இதற்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். ஆட்சி அமைத்த இந்த நாட்களுக்குள் எங்களால் முடிந்த அளவு பயிர் கடன் தள்ளுபடி செய்துள்ளோம். இனி வரும் நாட்களில் இதுகுறித்து ஆலோசிப்போம்" விரைவில் நிதி நிலைமை சரி செய்யப்பட்டு அனைத்து வாக்குறுதிகளும்நிறைவேற்றப்படும்என்றுகூறினார்.

200 யூனிட் இலவச மின்சாரம் குறித்தும் பேசினார். முதல் 100 யூனிட் ஜெயலலிதா அம்மையார் கொடுத்தது என்றும், அது திமுக கொண்டு வந்த திட்டம் இல்லை என்றும் கூறினார்.

சட்டம் ஒழுங்கு சீரழிவுக்கு முந்தைய திமுக ஆட்சியே காரணம் என்று குற்றம்சாட்டினார்

எப்போதும் திமுகவுக்கும் தவெகவுக்கும் தான் போட்டிஎன்று கூறினார். திமுகவும் மற்றும் சிலரும் சேர்ந்து கொண்டு அடித்த கூத்தை நாடு பார்த்தாக கூறினார். மேலும், சட்டசபை நிகழ்வுகளை பலரும் தற்போது ஆவலுடன் பார்ப்பதாக கூறினார்.தற்குறி என்று உங்களால் சொல்லப்பட்டவர்கள் தான் இன்று உங்களை கேள்விக் குறி ஆக்கியுள்ளார்கள் என்று கூறினார். திமுக இப்படி ஆனதுக்கு காரணம் என்னவென்று உங்கள் குடும்பத்துக்குள் சென்று கேளுங்கள் என்று மக்கள் சொ ல்வதாக குறிப்பிட்ட அவர் அதிமுகவை தீர்ந்து போன சக்தி என்று மறைமுகமாக சாடினார். திமுகவை தீய சக்தி மட்டுமல்ல, தூரசக்தி என்றும் தூர்ந்துபோன சக்தி என்றும் குறிப்பிட்டார். தேர்தலில் காசு கொடுத்து ஓட்டு வாங்குவதை ஒழித்துள்ளதாக கூறினார். "6 மாசம் அமைதியா இருப்போம்ன்னு சொன்னவங்க, 6 நாள் கூட அமைதியா இல்லை.கல்யாணவீட்லகூடபோயிட்டு புலம்பியிருக்காங்க" என திமுகவை விஜய் விமர்சித்துப் பேசியுள்ளார். திருச்சி எனக்கு ரொம்ப ஸ்பெஷல் என்று கூறினார். தேர்தல் ஆணைய விதிப்படி நான் பெரம்பூர் எம்எல்ஏவாக இருக்கலாம். ஆனால், இந்த விஜய்யின் இதயம் திருச்சி கிழக்கு தான் என்று தெரிவித்தார். தமிழகத்தின் இதயமாக இருக்கும் திருச்சி எப்போதும் எனக்கு செல்லப் பிள்ளை என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். முதல்வராக பதவியேற்ற பிறகு விஜய் முதல்முறையாக திருச்சிக்கு வந்து உரையாற்றியுள்ளது கவனிக்கத்தக்கது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# பல் சமய நட்புறவு கழகத்தின் ஆதன் சமூக பணிகளும் உறுதிமொழிகள் ஏற்கப்பட்டன இளைஞர்கள் ஆலோசனை கூட்டம்!!



திருப்பூர்: ஜூன் 02

இளைஞர் அணி இணைச் செயலாளர் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் உசேன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாவட்ட கழகப் பேச்சாளர் கருப்புசாமி பாண்டி மாணவ ரணி செயலாளர் ரியாஸ் ஒன்றிய இளைஞரணி தலைவர் ஷேக் பல்லடம் ஒன்றிய தலைவர் முகமது அலி மாவட்ட தலைவர் ஷாஜகான் சிறப்புரை நிகழ்த்தினார். மாவட்டத் துணைத் தலைவர் நூர் முகமது மாவட்ட துணைச் செயலாளர் அர்ஷத் அலி மற்றும் ரபிக் அர்ஷத் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மதங்கள் வேறுபட்டாலும் மனிதநேயம் ஒன்றே என்ற உயரிய எண்ணத்தை மக்களிடையே பரப்புவதே இந்த இயக்கத்தின் நோக்கம் ஆகும்.

நமது இந்திய நாடு பல்வேறு மதங்கள் மொழிகள் கலாச்சாரங்கள் மற்றும் பாரம்பரியங்கள் நிறைந்த ஒரு அற்புதமான தேசமாகும் இங்கு இந்து, இஸ்லாம், கிறிஸ்துவம், சீக்கியம், புத்தம், சமணம், உள்ளிட்ட பல மதங்கள் சேர்ந்த மக்கள் சகோதரத்துவ உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் சில நேரங்களில் தவறான புரிதல்கள் வதந்திகள் மற்றும் பிரிவினை சிந்தனைகள் காரணமாக மனிதர்களிடையே இடைவெளிகள் உருவாக்குகின்றன இதனை தடுக்கவும் மனித நேயத்தையும் மத நல்லிணக்கத்தையும் வளர்க்கவும் உருவாக்கப்பட்ட அமைப்புதான் பல் சமய நட்புறவு கழகம் பல மதங்களை சேர்ந்த மக்கள் தங்களது தனித்துவங்களை மதித்துக் கொண்டு ஒருவரை ஒருவர் ஹபுரிந்து கொண்டு அன்பு ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்துடன் வாழ்வதே பல் சமய நட்புறவாகும். மதங்கள் வேறுபட்டாலும் மனிதநேயம் ஒன்றே என்ற உயரிய எண்ணத்தை மக்களிடையே பரப்புவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

ஏன் இந்த கழகம் தேவை??

இன்றைய உலகில் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் மனித உறவுகள் பல இடங்களில் பலவீனம் அடைந்து வருகின்றன. சமூக வலைதளங்களில் பரவும் பொய்யான செய்திகள் மத வெறுப்பு கருத்துக்கள் மற்றும் அரசியல் சுயநலன்கள் காரணமாக மக்களிடையே பிரிவினை ஏற்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் பல் சமய நட்புறவு கழகம் ஒரு பாலமாக இருந்து மக்களை இணைக்கிறது.

ஒரு மனிதன் எந்த மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அவர் பசியால் வாடினால் உணவு தேவை, நோயற்றால் சிகிச்சை தேவை துன்பத்தில் இருந்தால் ஆறுதல் தேவை, இதுவே மனிதநேயம் இதுவே பல் சமய நட்புறவின் அடிப்படை கழகத்தின் முக்கிய செயல்பாடுகள் பல்வேறு சமூக பணிகளை மேற்கொள்ளலாம். மரக்கன்று நடுதல் ரத்ததான முகாம்கள் இலவச மருத்துவ முகாம்கள் மாணவர்களுக்கு கல்வி உதவி சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரிடர் கால நிவாரண உதவிகள் மத நல்லிணக்க கருத்தரங்குகள் இளைஞர் விழிப்புணர்வு முகாம்கள் தேசிய தின விழாக்கள் இவற்றில் அனைத்து மத மக்களுடன் இணைந்து செயல்படும் போது சமூக ஒற்றுமை வலுப்பெறும் இளைஞர்களின் பங்கு நாட்டின் எதிர்காலம் இளைஞர்களின் கையில் உள்ளது. இளைஞர்கள் மத வெறுப்பை அல்ல மனிதநேயத்தை கற்றுக் கொள்ள வேண்டும் சண்டை யைஅல்ல சமாதானத்தை உருவாக்க வேண்டும் பிரிவினையை அல்ல ஒற்றுமையை வளர்க்க வேண்டும் பல் சமய நட்புறவுக் கழகத்தில் அதிக அளவில் இளைஞர்கள் பங்கேற்பதின் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.என பல்வேறு உறுதிமொழிகள் ஏற்கப்பட்டன..

# கமுதி க்ஷத்திரிய நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியைக்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டி விருது வழங்கினார்



கமுதி ஜூன் :2

ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியான க்ஷத்திரிய நாடார் பெண்கள் மேல் நிலைப்பள்ளி 12ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் நூறு சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது

மேலும் 10ம் வகுப்பு மாணவி காசிகா சக்தி 495 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். இதனை பாராட்டும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜித் காலோன் மற்றும் முதன்மை கல்வி அலுவலர் ரெஜினி ஆகியோர் பள்ளியின்தலைமையாசிரியைசிந்துமதியை பாராட்டி விருது மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கினர்

இதனை தொடர்ந்து க்ஷத்திரிய நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி நிர்வாக குழு சார்பில், செயலர் சங்கர் தலைமையில், தலைவர் சண்முகராஜ் பாண்டியன், பொருளாளர் சரவணன், உறுப்பினர்கள் குழந்தை ராஜன், ஜெகன் ஆகியோர் தலைமையாசிரியை சிந்துமதியை பாராட்டி நினைவு பரிசு வழங்கினர.



வேலூர் பழைய மாநகராட்சி வளாகம் அருகே தமிழக வெற்றி கழகம் சார்பாக அஞ்சலை அம்மாள் 136வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மாவட்ட செயலாளர் வேல்முருகன், சட்டமன்ற உறுப்பினர் வினோத் கண்ணன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்த காட்சி. அருகில் இணைச் செயலாளர் சீனிவாசன், துணைச் செயலாளர் தமிழ், பொருளாளர் பிரசாந்த் மற்றும் பலர் உள்ளனர்.

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவராக இரா. வைத்திநாதன் பொறுப்பேற்பு



தேனி, ஜூன் 2

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (31.05.2026) நடைபெற்ற நிகழ்வில், தேனி மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக மரு. இரா. வைத்திநாதன், பொறுப்பேற்றுக் கொண்டார்கள். ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்திய 2015 ஆம் ஆண்டு அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வில் தேர்ச்சி பெற்று, தமிழக அரசுப் பணியில் இணைந்த இவர், சேலம் மாவட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆகவும், தேனி மாவட்டம் உத்தமபாளையம் வருவாய் கோட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வருவாய் கோட்டத்தில் சார் ஆட்சியராகவும் பணியாற்றியுள்ளார். மேலும், தர்மபுரி மாவட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு சார்ந்த இணைச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பொறுப்புகளை திறம்பட வகித்துள்ளார். நிர்வாகத் திறன், மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகள், திட்டங்களை விரைவாக செயல்படுத்தும் ஆற்றல் மற்றும் நீண்டகால நிர்வாக அனுபவம் கொண்ட அதிகாரியாக அறியப்படும் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., தேனி மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டது மாவட்ட வளர்ச்சிக்கும், பொதுமக்கள் நலத்திட்டங்கள் மேலும் சிறப்பாக செயல்படுத்தப்படுவதற்கும் உறுதுணையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட அளவிலான அரசு துறை அலுவலர்கள் மற்றும் ஆட்சியர் அலுவலக அதிகாரிகள் கலந்து கொண்டு புதிய மாவட்ட ஆட்சித்தலைவரை வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தனர்.

“மக்கள் சேவையே உயர்ந்த சேவை” என்ற நோக்கத்துடன், தேனி மாவட்ட வளர்ச்சிக்கும், பொதுமக்களின் நலனுக்கும் முன்னுரிமை அளித்து பணியாற்றுவேன்” என புதிய மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., தெரிவித்தார்.




திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியராக ரவிகுமார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார். திருப்பத்தூர் மாவட்டத்தின் ஆறாவது மாவட்ட ஆட்சித் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.



தருமபுரி மாவட்டத்தின் 47 வது ஆட்சியராக சரவணன் பதவி ஏற்றுக்கொண்டு மாவட்ட வளர்ச்சிக்காக பாடுபடுவேன் என்று தெரிவித்தார்.

# திருச்சி மனைவியுடன் தகராறு கணவன் தூக்கிட்டு தற்கொலை

திருச்சி, ஜூன் 2

திருச்சி ஜீயபுரம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட எம் கூடலூர் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீதர், மது போதைக்கு அடிமையானதால் மனைவி சன்மதிக்கும் அவருக்கும் தகராறு ஏற்பட்டது. இதனால் சன்மதி தனது குழந்தைகளுடன் தாய் வீட்டுக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. மனமுடைந்த ஸ்ரீதர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்த ஜீயபுரம் போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சியில் முதல்வர் விஜய்க்காக வைக்கப்பட்ட பேனர்கள் அகற்றம்



திருச்சி, ஜூன் 2

திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் விஜய் இன்று (ஜூன்.1) திருச்சி செல்கிறார். டிவிஎஸ் டோல்கேட் வழியாக முதலமைச்சர் செல்ல உள்ள நிலையில், அந்தப் பகுதியில் தவெக நிர்வாகிகள் சார்பில் வைக்கப்பட்டிருந்த பிளக்ஸ் பேனர்கள் காவல்துறையினரால் அகற்றப்பட்டன. முதலமைச்சரின் கான்வாய் வாகனங்கள் எந்த வித இடையூறும் இல்லாமல் பாதுகாப்பாக செல்லும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.



## சென்னை ஆவடி ரெட்டிபாளையத்தில்

# அருள்மிகு ஸ்ரீ ஆதி மொட்டையம்மனுக்கு புனராவர்த்தன ஜீரனோத்தாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா

சென்னை, ஜூன் 2

சென்னை ஆவடி ரெட்டிபாளையம், மொட்டையம்மன் கோவில் தெருவில், அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஆதி மொட்டையம்மனுக்கு புனராவர்த்தன ஜீரனோத்தாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. எல்லாம் வல்ல ஸ்ரீ ஸர்வ சக்தி மங்கள சொரூபிணி , ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சொரூபமாய் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ ஆதி மொட்டுயுடையம்மன் என்கின்ற ஸ்ரீ ஆதி மொட்டையம்மன் மற்றும் ஸ்ரீ பாலகணபதி, பாலமுருகன், மகாலட்சுமி, மஹா ஸரஸ்வதி, மகாகௌரி, வராகி அம்மன் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும், தவசித்தர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மற்றும் சற்குரு சிவயோகி, பூதலம்பட்டு ஸ்ரீ சங்கர சுவாமிகள் அருள் ஆசியோடும், ஸ்ரீ பார்வதி பரமேஸ்வர அருளோடும், மங்களகரமான பராபவ வருடம் வைகாசி மாதம் பௌர்ணமி திதியும், அனுஷம் நட்சத்திரம், அமிர்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் எஸ் சரவணன், சிவாச்சாரியார் முன்னிலையில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. ஏராளமான சுற்று வட்டார பக்த கோடிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். சிறப்பு அழைப்பாளராக 33வது வார்டு கவுன்சிலர் ஹரி, ஓம் சக்தி டிரேடர்ஸ் உரிமையாளர் சுந்தரம், ஜெயலட்சுமி சுந்தரம் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆலய தலைவர் சத்தியமூர்த்தி மற்றும் ஆலய நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# குமரியில் போதைப்பொருட்களுக்கு எதிரான நடவடிக்கை: 2 வாரங்களில் 44 பேர் கைது

நாகர்கோவில், ஜூன்.2

குமரி மாவட்டத்தில் போதைப்பொருட்களின் நடமாட்டத்தை முற்றிலுமாக ஒழித்து, இளைஞர்கள் மற்றும் பொது மக்களை போதைப்பழக்கத்தின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின்பேரில் கடந்த மே 13ஆம் தேதி ஐந்து சிறப்பு தனிப்படைகள் அமைக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கடந்த 2 வாரங் களில் தனிப்படைகள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளில் 18 கஞ்சா வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 6 கிலோ 750 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்குகளில் தொடர்புடைய 27 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல், 17 குட்கா வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 253 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் 17 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்மூலம், கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 35 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 44 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், கணிசமான அளவிலான போதைப்பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

“போதைப்பொருட்கள் இல்லாத கன்னியாகுமரியை உருவாக்குவது காவல்துறையின் முக்கிய இலக்காகும். போதைப்பொருள் விற்பனை, கடத்தல் மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும்” என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உறுதியளித்துள்ளார்.

போதைப்பொருட்களுக்கு எதிரான இந்த தொடர் நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டு, பாதுகாப்பான மற்றும் போதைப்பொருட்கள் இல்லாத கன்னியாகுமரியை உருவாக்க காவல் துறை உறுதியுடன் செயல்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாலியல் வன்கொடுமை பாலியல் கொலை; குற்றங்களை தடுக்க தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம் அரசுக்கு முக்கிய ஆலோசனை



தென்காசி, ஜூன் 02

தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற பாலியல் வன்முறைகள், பாலியல் வன்கொடுமைகள், பாலியல் கொலை உள்ளிட்ட குற்றங்களை தடுக்க தமிழக அரசு குற்றவாளிகளின் ஆணுறுப்பை அறுவை சிகிச்சை மூலம் நீக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

தமிழ்நாடு அரசு டாக்டர் சங்கத்தின் தென்காசி மாவட்ட பொதுக்குழு கூட்டம் மாவட்ட தலைவரும் மாநில செயலாளருமான டாக்டர் இரா.ஜெஸ்லின் தலைமையில், மாவட்ட பொருளாளர் டாக்டர்ராஜேஷ்கண்ணாமுன்னிலையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில்மாவட்ட செயலாளர் டாக்டர்.செந்தில் சேகர் , மாவட்டச் செயலாளர் டாக்டர் முகமது இப்ராகிம் , துணைத் தலைவர் டாக்டர் ராஜலட்சுமி, இணைச் செயலாளர்கள் டாக்டர் திருமலை குமார், டாக்டர் கார்த்திக் அறிவுடை நம்பி, மற்றும் மருத்துவர்கள் தேவி கற்பூரநாயகி, சங்கரி, செல்வ பாலா, நிர்மல் , ராஜேஷ், பாலகணேஷ், உமா மகேஸ்வரி, அபிநயா, முகேஷ், நசீம் மற்றும் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

பெண்களும் பெண் குழந்தைகளும் நமது நாட்டின் பொக்கிஷங்கள்.என்றும் குழந்தைகள் மற்றும் பெண்கள் மீது நடத்தப்படும் பாலியல் தொந்தரவுகள் மற்றும் பாலியல் வன்கொடுமை கொலைகள் ஆகியவற்றை தென்காசி மாவட்ட தமிழ்நாடு அரசு டாக்டர் சங்கம் வன்மையாக கண்டிப்பதோடு, அரசுக்கு பின்வரும் வேண்டுகோளை வைக்கிறது.

பாலியல் கொடும் குற்றச் செயல்கள், பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை செய்யப்படும், பெண்கள் மற்றும் குழந்தைகளை உடல் கூராய்வு செய்யும் மருத்துவர்கள் சொல்லல்லா துயரம் அடைகின்றனர். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாவதோடு, இதனை முழுவதுமாக நிறுத்த அரசு கடுமையான சட்டங்கள் ஏற்றுவது இக்காலத்திற்கு மிகவும் தேவையானதாக உள்ளது என அனைத்து அரசு மருத்துவர்களும் கருதுகின்றனர்.

பாலியல் துன்புறுத்தல் செய்து கொலை செய்யும் குற்றவாளிகளுக்கு, நீதிமன்ற வழங்கும் தீர்ப்போடு சேர்த்து, அவர்களின் ஆணுறுப்பை அறுவை சிகிச்சை மூலம் முழுவதுமாக நீக்குவது குறித்து சட்டம் இயற்ற இச்சங்கம் தமிழக அரசுக்கு கோரிக்கை வைக்கிறது. உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. முடிவில் தமிழ்நாடு அரசு டாக்டர் சங்கத்தின் தென்காசி மாவட்ட தலைவரும் மாநில செயலாளருமான டாக்டர் இரா ஜெஸ்லின் அனைவருக்கும் நன்றி கூறினார்.

வீரமங்கை அஞ்சலையம்மாள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு

# திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்யும் நிகழ்ச்சி



திருப்பூர், ஜூன் 2

திருப்பூர் கருவம்பாளைம் KVநகரில் உள்ள திருப்பூர் மேற்கு மாவட்ட தமிழக வெற்றி கழகத்தின் அலுவலகத்தில் மேற்கு மாவட்ட செயலாளர் சங்கர் தலைமையில் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் ராம்குமார் முன்னிலையில் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்யும் நிகழ்ச்சியில் பல் சமய நட்புறவு கழகம் பல்லடம் ஒன்றிய தலைவர் முகமது அலி தலைமையில் மாவட்ட தலைவர் ஷாஜஹான் மாவட்ட இளைஞர் அணி தலைவர் உசேன்மாவட்ட இளைஞர் அணிசெயலாளர்சுரேஷ்மாவட்ட இளைஞர் இணை செயலாளர் தங்கராஜ் மாநகர இணைசெயலாளர் சர்புதீன் இளைஞர் அணி பிரம்மா ஆகியோர் கலந்து கொண்டோம். விடுதலைப் போராட்டத்தில் தன்னலமற்ற சேவையால் வரலாற்றில் இடம்பிடித்த அஞ்சலையம்மாள் அவர்களின் தியாகமும், நாட்டுப்பற்றும் என்றும் தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக விளங்கும். என தெரிவித்தனர்..



தூத்துக்குடியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் சி.ப்ரியங்கா, அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஆட்சியர்



ஈரோடு ஜூன் 2

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

அப்போது மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை, முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, மேல்நிலை நீர்தேக்க தொட்டி, தெரு விளக்கு. ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 255 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி குழந்தைத் தொழிலாளியாக பணிபுரிந்து மீட்கப்பட்ட துளசி மணிகண்டனுக்கு மறுவாழ்வு நிவாரணத் தொகையாக ரூ.55,000 வழங்கினார் .

மேலும், குழந்தைத் தொழிலாளியாக பணிபுரிந்து மீட்கப்பட்ட மாணவன் துளசி மணிகண்டன் தற்போது இளங்கலை பொறியியல் பட்டம் இரண்டாம் ஆண்டு பயின்று வருவதை அறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவருக்கு புத்தகத்தினை பரிசாக வழங்கி வாழ்வில் முன்னேற கல்வியின் அவசியம் குறித்து அறிவுரைகளை வழங்கி வாழ்க்கையில் மேலும் முன்னேற தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

தொடர்ந்து வழங்கப்பட்ட கோரிக்கை மனுவின் மீது உடனடி தீர்வாக லக்காபுரம் பகுதியை சேர்ந்த முனிச்சாமி என்ற மாற்றுத்திறனாளிக்கு ரூ.9,300 மதிப்பிலான மூன்று சக்கர மிதிவண்டியினை வழங்கினார்.



கோவை மாவட்டத்திற்கு பல்வேறு கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வை 48 வது வார்டு செயலாளர் பிரேம்குமார் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.



# பேச்சிப்பாறை அணையிலிருந்து பாசன தண்ணீர் திறப்பு மாவட்ட ஆட்சியர், அமைச்சர் பங்கேற்பு

நாகர்கோவில், ஜுன். 2

கன்னியாகுமரி மாவட்டம் கோதையாறு மற்றும் பட்டணங்கால் பாசனத்திற்கு பேச்சிப்பாறை அணையிலிருந்து விவசாயிகளின்பாசனவசதிக்காக நேற்று தண்ணீர்திறக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் பிரதாப் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.செல்லசாமி (பத்மநாபபுரம்), ந.தளவாய் சுந்தரம் (கன்னியாகுமரி), எஸ்.ஆஸ்டின் (நாகர்கோவில்), ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாதுறை அமைச்சர் ராஜேஷ்குமார் தண்ணீர் திறந்து விட்டு, செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் குமரி மாவட்ட விவசாயத்திற்காக பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை, சிற்றார்I மற்றும் சிற்றார்II அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிட ஆணையிட்டுள்ளார். அதனடிப்படையில் 79 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீரானது நெல் சாகுபடி, வாழை சாகுபடி, தென்னை சாகுபடி, காய்கறி சாகுபடிக்கு பயன்படுகிறது.

கோதையாறு கால்வாயில் 64 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், பட்டணங்கால்வாயில் 15 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் என மொத்தம் 79 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்ளது. இன்றைய தினம் நீர் திறக்கப்படுவதால் பயன்பெறும் குளங்கள் மற்றும் நேரடி பாசனம் மூலம் விவசாயிகள் பயனடைவதோடு ஒரு உற்பத்தி திறன் மற்றும் மொத்த உற்பத்தியை அதிகப்படுகிறது. விவசாய பெருமக்கள் நீரினை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூலை பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கூறினார்.

நிகழ்ச்சியில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, வேளாண்மை இணை இயக்குனர் வாணி, விவசாய சங்க பிரதிநிதிகள் வின்ஸ் ஆன்றோ, தாணுபிள்ளை, செண்பக சேகர பிள்ளை, அரசு அலுவலர்கள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# குமரி தந்தை மார்ஷல் நேசமணி 58 வது நினைவு நாள் திருவுருவச் சிலைக்கு அமைச்சர் மரியாதை

நாகர்கோவில், ஜுன். 2

குமரி தந்தை மார்ஷல் நேசமணி 58 வது நினைவுநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் நாகர்கோவில் வேப்பமூடு மார்ஷல் நேசமணி மணிமண்டபத்திலுள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் பிரதாப் தலைமை வகித்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ் குமார் நேசமணி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆஸ்டின் (நாகர்கோவில்), ஆர். செல்லசாமி (பத்மநாபபுரம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது:

'குமரிதந்தை", 'கன்னியாகுமரிமாவட்டத்தின்சிற்பி", 'மார்ஷல்"எனஅனைத்து மக்களால் புகழப்பட்டு வரும் மாபெருந் தலைவர் மார்ஷல் நேசமணி. நீதிக்காக போராடிய நெஞ்சுரமிக்க தலைவர், நேர்மையோடு வாழ்ந்து காட்டிய தலைவர், தன்னலம் கருதாத தியாகச் செம்மல், மார்ஷல் நேசமணி அவர்கள்01.06.1968 ஆம் ஆண்டு தனது 73ஆவது வயதில் காலமானார்கள். அன்னாரின் 58வது நினைவுநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் மார்ஷல் நேசமணி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத் பிரைட், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் செல்வலெட் சுஷ்மா, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் ஆறுமுகம், மார்ஷல் நேசமணியின் பேரன் ரெஞ்சித் அப்பலோஸ், தயாபதி நளதம், மார்ஷல் நேசமணி கொள்ளுப் பேத்தி குடும்பத்தினர், நாகர்கோவில் மாநகராட்சி உறுப்பினர் நவீன், மாதவன், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டார்கள்.



# கோவையில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆய்வு

கோவை ஜூன்:02

கோவை மாவட்டம் காந்திபுரத்தில் ரூ.301 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பெரியார் அறிவுலகம் கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்துறை அரசு செயலாளர் செல்வராஜ் அரசு முதன்மைச் செயலாளர்பொதுப்பணித்துறை ஷுன்சொங் காம் ஜடக் சிரு மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் சூலூர் சட்டமன்ற உறுப்பினர் சுகுமார்,முதன்மை தலைமைப் பொறியாளர் மணிவண்ணன்,தலைமைப் பொறியாளர் கோவை ரங்கநாதன்,கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன்,செயற்பொறியாளர் செல்வராஜ் பொதுப்பணித்துறை அலுவலர்கள்,ஒப்பந்ததாரர்கள் உட்பட பலர் உள்ளனர்.

திருச்சி

# தடுப்புகளை தாண்டி குதித்த தொண்டர்கள்



திருச்சி, ஜூன் 2

தமிழக முதலமைச்சராக பதவியேற்ற பிறகு முதல்முறையாக திருச்சிக்கு வருகை தந்த முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துகூட்டத்தில்உரையாற்றஉள்ளார். திருச்சி விமான நிலையத்தில் இருந்து சாலை மார்க்கமாக வந்த அவரை காண ஆவலோடு காத்திருந்த தொண்டர்கள் தடுப்புகளை தாண்டி குதித்து ஓடினர்.

இந்த நிகழ்வு அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. முதலமைச்சரின் வருகையை ஒட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள்பலப்படுத்தப்பட்டிருந்தன.

வரதட்சணை கொடுமை..

# CM விஜயிடம் கோரிக்கை வைக்க காத்திருக்கும் இளம்பெண்



திருச்சி, ஜூன். 2

திருச்சி கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க முதலமைச்சர்விஜய்இன்று(ஜூன்.01) திருச்சி வருகை தந்துள்ளார். இந்நிலையில், அங்குவந்த இளம்பெண் ஒருவர்கூறுகையில், "அம்மா, அப்பா பேச்சை கேக்காம கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இப்போஎன்மாமியார்வரதட்சணைகொடுமை பண்றாங்க. என் குழந்தைய கூட மறைச்சு வெச்சுட்டாங்க. முதலமைச்சரை பார்த்து கோரிக்கை வைக்க வந்திருக்கேன்" என கண்ணீருடன் அப்பெண் கூறியுள்ளார். இந்தப் பெண் சேலம் மாவட்டத்தில் இருந்து வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது

# திருச்சி: அமைச்சர் ரமேஷ் எழுச்சியுரை



திருச்சி, ஜூன் 2

தமிழ்த்தாய் வாழ்த்துடன் முதல்வர் விஜய் பங்கேற்ற நன்றி தெரிவிக்கும் கூட்டம் தொடங்கியது. இதில் உரையாற்றிய அமைச்சர் ரமேஷ் திருச்சி தங்களுடைய கோட்டை என்று சொன்னவர்களுக்கெல்லாம் மனக்கோட்டையை உடைத்து திருச்சி மலைக்கோட்டையை கைப்பற்றியுள்ளார் முதல்வர் விஜய். ஸ்ரீரங்கத்தில் சாமானியனான என்னை நிற்க வைத்து வெற்றி பெற வைத்தவர் முதல்வர் விஜய். திருச்சி முதலாளிகளின் பேச்சுக்கு பதிலேடி. திருச்சி தற்போது தளபதி கோட்டையாக மாறியுள்ளது.

# மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த பயிற்சி வகுப்பு; மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஜுன்.2

கன்னியாகுமரிமாவட்ட ஆட்சியர்அலுவலகவருவாய் கூட்டரங்கில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த பயிற்சி வகுப்பு துவக்க நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் துவக்கி வைத்து பேசினார். அவர் பேசியதாவது:

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027ன் முதல் கட்டமான, அதாவது வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு நடவடிக்கைகள், ஏப்ரல் மற்றும் செப்டம்பர் 2026க்கு இடையில் ஒரு மாத காலத்திற்கு நாடு முழுவதும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தமிழ்நாட்டில்,வீட்டுப்பட்டியல்நடவடிக்கைகள் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை(30நாட்களுக்கு) மேற்கொள்ளவும், சுய கணக்கெடுப்பு காலம் ஜூலை 17ம்தேதிமுதல்31ம்தேதிவரை(களப்பணிதொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்) மேற்கொள்ளவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலராக மாவட்ட ஆட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்ட வன அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், சார் ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர், மாநகராட்சி ஆணையர், முதன்மை கல்வி அலுவலர், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சிஆணையர்கள்,பேரூராட்சிசெயல்அலுவலர்கள் ஆகியோர் பொறுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கலெக்டர் கூறினார். இப்பயிற்சியில்பத்மநாபபுரம்சார்ஆட்சியர்வினய்குமார் மீனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுகிதா, முதன்மை பயிற்றுநர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

கிருஷ்ணகிரி, ஜூன் 2

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்த தாவது

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந் தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடை பெற்று வருகிறது. அதனடிப்படையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப்பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி மற்றும் மின் இணைப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து 581 மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர்.அ.சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். பொது .கிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான்,

மாவட்ட வழங்கல் அலுவலர் .கீதா ராணி, தனித்துணை ஆட்சியர்.சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் .சிவக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் .அமீர் பாஷா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நிலம் .தர்மராஜ், துணை. ஆட்சியர்.பயிற்சி செல்வி.சௌமியா மற்றும் அனைத்து துறை முதன்மை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# கீழடி அகழ்வாய்வு அறிக்கையை உடனே வெளியிடுக; குமரி மாவட்ட தாகம் கலைக்குழு கோரிக்கை

மார்த்தாண்டம், ஜூன்.2

2014 - 2016 காலகட்டத்தில் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் சார்பாகக் கீழடி அகழாய்வு, தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் என்பவரால் மேற்கொள்ளப் பட்டது. மேற்கண்ட ஆய்வறிக்கையை வெளியிட மிடாலக் காடு தாகம் கலைக்குழு தலைவர் ஏம்.எ.சாந்தகுமார் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கீழடியில் கிடைக்கப் பெற்ற பொருட்கள் மற்றும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் 982 பக்கங்கள் கொண்ட அறிக்கையினை அமர்நாத் ராமகிருஷ்ணன் இந்தியத் தொல்லியல் ஆய்வகத்திற்கு 2023 ஜனவரி மாதத்தில் முறைப்படி சமர்ப்பித்துள்ளார். அறிவியல் அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வின்முடிவில் கீழடியின் காலம் கி.மு.800 500 வரை என்பதாக அவர் வரையறுத்துள்ளார்.

ஆனால், போதிய உண்மையான காரணங்களோ, மதிப்புயர் நியாயங்களோ இன்றி அமர்நாத் சமர்ப்பித்த ஆய்வறிக்கையினை மறுத்து, அவரின் ஆய்வறிக்கையை மேம்படுத்தி அனுப்புமாறு இந்தியத் தொல்லியல் ஆய்வகம் அவருக்கே திருப்பி அனுப்பியது. இந்த அறிக்கையை அனுப்பிய இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் உறுப்பினர் குழுவில் உள்ளஎவரும் கீழடிக்கு வந்ததே இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் தனக்கு அனுப்பிய அறிக்கை செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்ப அடிப்படையில் உருவாக்கப்பட்டதாக அமர்நாத் தெளிவுபடுத்துகிறார்.

ஆனால், எவ்விதப் புறச் செல்வாக்கிற்கும் உள்ளாகாமல், உண்மையான மற்றும் சரியான அறிக்கையைக் கடமை உணர்வோடும் மனச்சாட்சியோடும் சமர்ப்பித்ததாகக் கூறி, தனது ஆய்வறிக்கையை மாற்றி அமைக்கும் பேச்சுக்கே இடமில்லை என அமர்நாத் திட்டவட்டமாக எழுத்து வடிவில் தெரிவித்து விட்டார். ஆனால் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் அறிக்கையைத் திருத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருவதை ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துறைவாரியான கடிதப் போக்குவரத்தோடு இந்த முக்கியமான செய்தி முடங்கி விடுவது ஏற்புடையதல்ல. அமர்நாத் தனது ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்து மூன்று ஆண்டுகளாகியும் கீழடி ஆய்வறிக்கையை வெளியிடாமல் இருப்பது பெரும் ஐயத்தை உண்டாக்குகிறது. இதனால் உண்மை நிலை என்ன என்பதை அறிய முடியாமலும் இருக்கிறது. எனவே இத்தகைய குழப்பத்தைப் போக்கும் வகையில், அமர்நாத் ராமகிருஷ்ணனின் கீழடி ஆய்வறிக்கையின் மூலப்பிரதியை இந்தியத் தொல்லியல் ஆய்வகம் உடனடியாகப் பொதுவெளியில் வெளியிட்டு, அனைவரின் ஐயத்தையும் போக்க வேண்டும்.

மேலும், அமர்நாத் ராமகிருஷ்ணன் நிலைப்பாட்டை ஆதரித்தும், இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் தொல்லியல் அறம், விதிகள்,

விழுமியங்களுக்கு எதிராகத் தமிழர் நாகரிகத்தின் தொன்மையை ஏற்க மனமின்றிச் செயல்படும் போக்கினைக் கண்டித்தும் முந்தைய முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்திருந்தது.

தமிழகத்தின் தொன்மையை அறிவியல் வழியில் நிறுவும் அமர்நாத் ராமகிருஷ்ணனின் கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிட தற்போதைய தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அரசும் உரிய அனைத்து வழிகளிலும் முன்னெடுப்புகளை மேற்கொள்ள கன்னியாகுமரி மாவட்ட தாகம் கலைக்குழு சார்பாக வேண்டுகிறோம்.

## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில்

# மக்கள் குறை தீர்வு கூட்டம்; மாவட்ட ஆட்சித் தலைவர் மனுக்களை பெற்றார்



திருப்பத்தூர்:ஜூன்:2,

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.உமாமகேஸ்வரி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், (வடக்கு) முருகன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தின பேரணி மற்றும் விளக்க உரை கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் தள்ளாடும் வயதில் பெரியவர் ஒருவர் கலந்து கொண்டார் அவருக்கு திடீரென ஏற்பட்ட மயக்கத்தால் மயக்கம் அடைந்தார் அவருக்கு காலதாமதமாக முதலுதவி செய்யப்பட்டது அருகில் இருந்த அனைவரும் வேடிக்கை மட்டும் பார்த்திருந்தனர் மயக்கம் அடைந்து இரண்டு நிமிடத்தில் அவரிடமே செய்தியாளர்கள் பேட்டி எடுத்ததும் அவர் தேவையான பதில்களை அளித்ததும் வேடிக்கை தனமாக உள்ளது

# அரசியலில் அடிப்படை நாகரீகத் தைக் கூட கடைபிடிக்காமல் பதவி ஆசையால் ஒரே இரவில் அணி மாறியது காங்கிரஸ் கட்சி

## தஞ்சாவூர் மத்திய மாவட்ட திமுக செயற்குழுவில் கண்டனம்



தஞ்சாவூர்ஜூன் 2

அரசியலின் அடிப்படை நாகரீகத் தை கூட கடைபிடிக்காமல் பதவி ஆசையால் ஒரே இரவில் அணி மாறியது காங்கிரஸ் கட்சி என தஞ்சாவூர் மத்திய மாவட்ட திமுக செயற் குழுவில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது .

தஞ்சாவூர் கலைஞர் அறிவாலய த்தில் மத்திய மாவட்ட திமுக செயற் குழு கூட்டம் நடந்தது. இதற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் செல்வம் தலைமை தாங்கினார் உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எஸ் எஸ் பழனி மாணிக்கம், வைத்தியலிங்கம் எம்எல்ஏ முன்னாள் எம் எல்ஏக்கள் டி கே ஜி நீலமேகம், ராமச்சந்திரன், மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகர செயலாளர் சண். ராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மத்திய மாவட்ட திமுக செயலாளர் துரை சந்திர சேகரன் எம்எல்ஏ அனைவரையும் வரவேற்றார்

கூட்டத்தில், நடந்து முடிந்த சட்ட சபை தேர்தலில் திமுக மீதும், தலைவர் மு .க . ஸ்டாலின் மீதும் நம்பிக்கை வைத்து திமுக தலை மையிலான மத சார்பற்ற முற்போக் கு கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 54, லட்சத்து82, ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கும் இணைந் து பணியாற்றிய வாக்களித்த கூட்டணி கட்சியினர் கூட்டணி கட்சி களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்

வருகின்ற 3ஆம் தேதி முன்னாள்முதலமைச்சர் மு.கருணாநிதி பிறந்த நாளை யொட்டி கருப்பு சிவப்பு கொடியேற்றி, ஆதரவற்ற முதியோர், மாணவ ,மாணவிகள் விடுதிகளில், அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.

நடந்து முடிந்த சட்ட சபை தேர்தலில் திமுக வினரின் உழைப்பினால் காங்கிரஸ் கட்சி 5 சட்ட சபை உறுப்பினர்களை வென்றன. தேசிய கட்சியாக இருந்து கொண்டு, தேர்தலுக்கு முன்பாகவே ,மாநில கட்சியான திமுக வாக்குகளால் மக்களவை மாநிலங்களவை உறுப் பினர் பதவியும் பெற்றனர். இத்த னையும் பெற்றுக் கொண்டு, ஒரு நன்றி கூட சொல்லாமல் நன்றி உணர்ச்சியும் இல்லாமல் அரசியலி ல் அடிப் படை நாகரீகத்தை கூட கடைபிடிக்காமல் பதவி ஆசையால் ஒரே இரவில் அணிமாறி சென்றனர். சொந்த உழைப்பில் ஒரு நாளு ம் வெற்றி பெற முடியாத நம்பியவர் களுக்கு எல்லாம் துரோகம் இழை க்கும் அறமில்லாத காங்கிரஸ் கட்சி யை வன்மையாக கண்டிக்கிறோம்

ஆட்சிப் பொறுப் பேற்று 21 நாட்க ளில் தமிழ்நாடு எங்கும் சட்ட ஒழுங் கு சீர்குலைவு ஏற் பட்டுள்ளது. மக்க ளின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ரீல்ஸ் ஆட்சியை நிறுத்தி விட்டு, ரியல் ஆட்சியை வழங்க வேண்டும். என்பன உள்ளிட்டபல் வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

இதில் மாவட்ட துணை செயலா ளர் மணிமாறன், கனகவள்ளி, புண்ணியமூர்த்தி ,மாவட்ட பொரு ளாளர் எல்ஜி அண்ணா மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வருவாய் கோட்டாசியர் அவர்கள்
திருப்பூர் மாவட்டம்.
நாள்:20.05.2026
ஒ.மு.0932/2026/ஆ2
திருமதி. செல்வி
க/பெ. மணிகண்டன்.
க.எண். 8/1
சூர்யா காலனி, கோல்டன் நகர்
மெயின் ரோடு, மன்னரை,
திருப்பூர் மாவட்டம்.
பார்வை: மனுதாரர் திருமதி. செல்வி
க/பெ. மணிகண்டன்
என்பவர் மனு
நாள்:05.02.2026
...மனுதாரர்.
இல்லை.
...எதிர் மனுதாரர்.

பொது அறிவிப்பு

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திரு. முத்துக்குமார் என்பவர் கடந்த 30. 04. 2012. அன்று வீட்டிலேயே பிறந்தது தொடர்பாக க.எண்:8/1 சூர்யா காலனி, கோல்டன் நகர் மெயின் ரோடு மன்னரை, திருப்பூர் மாவட்டம். என்ற மேற்படி முகவரியில் பிறந்தது தொடர்பாக, பிறப்பினை அந்நேரத்தில் பதிவு செய்ய தவறிய நிலையில் கால தாமதக் கட்டணத்துடன் பிறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15. நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டா ட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்,
திருமதி. செல்வி
க/பெ. மணிகண்டன்.



# குமரி ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நாகர்கோவில், ஜூன்.2

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 338 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கோதை, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைகேல் அந்தோணி பெர்னாண்டோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பத்மபிரியா (நிலம்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செந்தூர் ராஜன், உதவி ஆணையர் (கலால்) ஈஸ்வரநாதன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கலைமதி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலையரசன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# இந்திய தேசிய காங்கிரஸ் 51 வது டிவிஷன் சௌரிபாளையம் பொதுமக்கள் சார்பில் ஆட்சியரிடம் மனு

கோவை ஜூன்:02

இந்திய தேசிய காங்கிரஸ் 51 வது டிவிஷன் சௌரிபாளையம் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். அம்மனுவில் கோவை சவுரிபாளையம் சாலையில் அமைந்துள்ள 1688 என்கொண்ட டாஸ்மார் மதுக்கடை நீண்ட காலமாக இயங்கி வருகிறது. விதிகளுக்கு புறம்பாகவும் மக்கள் குடியிருப்பு மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகிலும் உள்ள மது கடைகள் அகற்றப்படும் என்ற தமிழக முதலமைச்சரின் அதிரடி அறிவிப்பை தொடர்ந்து இக்கடை உடனடியாக மூடப்படும் என அப்பகுதி பெண்கள், பள்ளி குழந்தைகள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகவும் எதிர்பார்ப்பாக காத்திருந்தனர்.

ஆனால் இன்றுவரை இந்த கடை மூடப்படாமல் தொடர்ந்து செயல்பட்டு வருவது பொதுமக்களிடையே பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. ஆகவே இந்த மதுக்கடையை அகற்றி இடமாற்றம் செய்து தர வேண்டும் என்று சவுரிபாளையம் பொதுமக்கள் மற்றும் எங்கள் அமைப்பின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என்று மனு அளித்தனர்.



## தவெக ராமநாதபுரம் மேற்கு மாவட்ட செயலாளர் தலைமையில்

# அஞ்சலையம்மாளின் 136வேது பிறந்தநாள் விழா

கமுதி, ஜூன் 2:

இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனையும், தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை முன்னோடிகளில் ஒருவருமான அஞ்சலையம்மாளின் 136வது பிறந்தநாள் விழா, ராமநாதபுரம் மேற்கு மாவட்ட செயலாளர் மதன் தலைமையில் கமுதி பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றது.

அஞ்சலையம்மாளின் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்திய மதன், அவரது தியாகம் மற்றும் தேசப்பற்றை நினைவுகூர்ந்தார். நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து கமுதி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டையூர் கிராமத்தில் வடக்கு ஒன்றிய செயலாளர் வீரகுமார் முன்னிலையில் பள்ளி மாணவர்களுக்கு பள்ளிப் பைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இணைச் செயலாளர் வேல்முருகன், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக நடைபெற்ற இந்த நலத்திட்ட நிகழ்ச்சிக்கு பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்கள் பாராட்டு தெரிவித்தனர். நிகழ்ச்சி உற்சாகமான சூழலில் நிறைவடைந்தது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.